**பேருவளை பிரதேச சபை - 2022**

----------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பேருவளை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பேருவளை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை

அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நியமத்தின் அத்தியாய இலக்கம் 3.27 முதல் 3.32 வரை குறிப்பிடப்பட்ட பந்திகளுக்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரித்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ரூபா 675,000 ஆன நிலையான வைப்பிற்காக மீளாய்வாண்டிற்குரிய வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வட்டி வருமானம் சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அரசாங்கத்திடமிருந்து கிடைத்த மூலதன மானியங்களில் வருடாந்த காலக் கழிவிற்கு சமமான அளவொன்று விரிவான வருமானக் கூற்றில் மீளாய்வாண்டின் வருமான செலவினமாக இனங்காணப்பட்டிருக்க வில்லை. | விரிவான வருமானக் கூற்றில் குறிப்பு இலக்கம் 10 இன் கீழ் காணபிக்கப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2018 திசம்பர் 31 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட நிதியல்லாச் சொத்துக்களை மதிப்பீடு செய்யும் வழிகாட்டி | காணி மற்றும் கட்டிடங்கள் தொழிற் தகைமைபெற்ற மதிப்பீட்டாளரை வரவழைத்து மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் சபையினால் நியமிக்கப்பட்ட குழுவின் மூலம் காணி மற்றும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பி மதிப்பீட்டுப் பெறுமதி பெறப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,640,489 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 75,271,564 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 23,854,295 | 29,253,576 | 19,633,435 | 25,754,967 | 27,497,375 | 28,668,148 | 20,299,363 | 29,855,526 |
| (ii) | வாடகை | 22,921,850 | 20,825,028 | 23,330,393 | 5,952,825 | 18,780,360 | 21,774,627 | 17,074,308 | 7,517,574 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 4,130,000 | 4,102,000 | 3,893,040 | 898,500 | 1,081,500 | 907,382 | 704,382 | 261,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 100,000,000 | 152,309,224 | 189,838,595 | 115,798,726 | 110,850,000 | 110,850,000 | 90,220,000 | 20,630,000 |
| | மொத்தம் | 150,906,145 | 206,489,828 | 236,695,463 | 148,405,018 | 158,209,235 | 162,200,157 | 128,298,053 | 58,264,100 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆதனவரி காலப் பகுப்பாய்வின் பிரகாரம் ஒரு வருடத்திற்கு குறைந்த நிலுவை ரூபா 2,754,108 ஆகவும், 01-03 வருடங்களுக்கிடையிலான நிலுவை ரூபா 8,985,427 ஆகவும், 03-05 வருடங்களுக்கிடையிலான நிலுவை ரூபா 4,638,278 ஆகவும், 05-10 வருடங்களுக்கிடையிலான நிலுவை ரூபா 9,388,228 ஆகவும் இருந்ததுடன் 10 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை ரூபா 8,189,417 ஆகும். | ஆதனவரி அறவிடல் தொடர்பாக மெய்மையாய்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அந்த அறிக்கையின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் கடை வாடகை நிலுவை ரூபா 7,517,572 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 2,610,387 அதாவது 35 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடைகள் மூடி வைக்கப்பட்டமையினால் நிலுவையை பதிவேடுகளிலிருந்து பதிவழிப்பதற்கும் மிகுதிப் பணத்தை அறவிடுவதற்கு வழக்குத் தொடர்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) அளுத்கம, வாராந்த சந்தை சில்லறைக் கடைகள் 10 உம், மரக்கறிக் கடைகள் 15 உம், மக்கொன பொதுச் சந்தையில் 11 கடைகளும், தர்கா நகரில் 09 கடைகளும் வாடகை செலுத்தாமல் பல வருட காலமாக மூடப்பட்டிருந்தமையினால் சபைக்குக் கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | கடைகளில் காணப்படுகின்ற பிரச்சினைகளினால் மக்கள் குறைந்தமையினால் பாவனையின்றிக் காணப்பட்டது. | வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க | பட்டோலைகள் தயாரிக்கப்பட்ட பின் மாகாண இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு தண்டப்பணம் மற்றும் | நிலுவை நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டண வருமானத்தை விரைவாக பெற்றுக் |

| | | |
|---|---|---|
| வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 51,592,795 ஆகவும், முத்திரைக் கட்டணம் ரூபா 34,995,067 ஆகவும் காணப்பட்டது. | முத்திரைக் கட்டணத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிர்மாண மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு முன் பராமரிப்பு செய்யப்பட வேண்டி வீதித் திட்டம் ஒன்றைத் தயாரிக்காமல் மீளாய்வாண்டில் ரூபா 1,669,000 ஆன தார் மற்றும் 54 கோலாஸ் பரல்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | 2023 ஆம் ஆண்டிற்கான பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பராமரிப்பு திட்டம் ஒன்றைத் தயாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கரையோரப் பிரதேசத்திற்கு அண்மையில் நிர்மாணிக்கப்பட்ட பயாகல உடற்பயிற்சி நிலையத்தில் உபகரணங்கள் 2017 ஆம் ஆண்டு முதல் சேவை செய்தலோ அல்லது பராமரிப்போ மேற்கொள்ளப்படாமையினால் சகல இயந்திர உபகரணங்களும் அதிக அளவில் துருப்பிடித்தலுக்கு உட்பட்டிருந்தது. | பயாகல மற்றும் மக்கொன உடற்பயிற்சி நிலையம் இரண்டும் கரையோரப் பிரதேசத்திற்கு அண்மையில் காணப்படுகின்றமையினால் கடற்காற்றுக்கு எந்த நேரமும் உட்படுகின்றமையினால் துருப்பிடிக்கின்றது. | உடற்பயிற்சி நிலையத்தின் உபகரணங்களைப் பராமரித்தல் வேண்டும். |
| (ஆ) சபைக்குச் சொந்தமான 191 காணிகளின் சட்டரீதியான உரித்தை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி நிறுவனங்களில் காணப்படுகின்ற காணிப் பிரச்சினைக்கான தீர்வின் கீழ் பிரதேச செயலாளரால் நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. அதற்கான பிரச்சினைகள் யாவும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சபைக்குச் சொந்தமான காணிகளின் சட்டரீதியான உரித்தை பிரதேச சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபைக்கு சொந்தமான 117 காணிக் கூறுகளுக்குரிய சட்டரீதியான உரித்தை உறுதிப்படுத்துகின்ற ஆவணங்கள் காணப்படாமையின் காரணமாக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தை வரவழைத்து முறையான மதிப்பீடொன்றை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | பிரதேச செயலாளரால் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதன் பின்னர் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தை வரவழைத்து முறையான மதிப்பீடு மேற்கொள்ளப்படும். | காணிகளை முறையான பிரகாரம் மதிப்பீடு செய்தல் வேண்டும். |

## 3.3 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்ட ரூபா 2,502,000 ஆன 03 செயற்திட்டங்களுக்காக நிர்மாண திட்டம் மற்றும் அளவிடைப் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | முழுமையாக புதிய நிர்மாணமாக இல்லாமையினால் நிர்மாணத் திட்டம் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிர்மாணத் திட்டம் மற்றும் அளவிடைப் பத்திரங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | அளுத்கம புகையிரத வீதிக்கு சமாந்தரமான வீதியின் இறுதிப் பகுதியை கொங்கிறீட் இடும் போது கொங்கிறீட் தட்டின் தடிப்பம் மி.மி 125 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் கொங்னிறீட் இடும் போது அது மி.மி 120 தடிப்பத்தில் மேற்கொள்ளப்பட்டமையால் உரிய பணத்தை குறைத்துக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இவ்வாறு வீதியின் தரம் குறைந்தமையினால் இரண்டு இடங்களில் கொங்கிறீட் தட்டு உடைந்திருந்தது. | பிரதேச வீதியொன்றாக இருந்தமையால் தரம் குறைவடையாதிருந்தமை மற்றும் சிறு வெடிப்புள்ள இடங்கள் பழுதுபார்க்கப்பட வேண்டியுள்ளது. | கொடுப்பனவு செய்யும் போது நிர்மாணங்களின் தரத்தினைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் சபை ஊழியரின் தேவையின் அடிப்படையில் கூட்டுமொத்தமாக ரூபா 11,037,000 ஆன 13 செயற்திட்டங்கள் செயல் | இந்த 13 செயற்றிட்டங்களும் முன்னுரிமை அடிப்படையில் அமுல்படுத்தப்பட்டுள்ளது. | பாதீட்டு அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்படாமலும், பாதீட்டு அங்கீகாரம் இன்றியும் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

**சுற்றாடல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டிற்காக கழிவுப் பொருள் முகாமைத்துவத் திட்டம் தயாரிக்கப்பட்ட போதிலும் அந்த திட்டத்தில் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் கூட்டுப்பசளையிடல் மற்றும் உக்காத கழிவுகளை மீள்சுழற்சி செய்தல் போன்ற நிகழ்ச்சித் திட்டம் உள்ளடக்கப்படா மையினால் வெளித் தரப்பினருக்குச் சொந்தமான காணி ஒன்றில் கழிவுகளைப் போட்டு மண்ணால் மூடப்பட்டிருந்ததுடன் அதற்காக 2020 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 8,734,830 செலவிடப்பட்டிருந்தது. | கழிவுப் பொருட்களை முறையாக அகற்றுவதற்கு காணி இல்லாமையினால் இவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கழிவுகளை அகற்றுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |